1970 மார்ச் 21]

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்தக் கடன் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தரப்பட்டிருக்கிறது? எவ்வளவு தள்ளுபடிகள் செய்யப்பட்டிருக்கின்றன ? எந்த ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, பின் தங்கிய மக்களில் முடிதிருத்தும் தொழில், சலவைத் தொழில் பயிற்சிபெற்றுள்ள தகுதியுள்ள வகுப்பினருக்கும், அவர்கள் தங்கள் தொழிலில் நிலையாக ஈடுபடும்படிச் செய்யும் வகையில் கடன் வழங்கும் திட்டம் 1960-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தக் கடனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5½ சதவித வட்டி உண்டு. இந்தத் திட்டத்தை சில மாறுதல்களுடன் சென்னைமாநகர் நீங்கலாக மாவட்டங்கள் அனைத்திற்கும் 1961-62-ம் ஆண்டில் அரசு விரிவு படுத்தியது. கடன் கொடுக்கப்பட்டுள்ள விவரம் :

வட ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 4,093.10, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,926.12. செங்கற்பட்டு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 3,250.70, முடிதிருத்து வோருக்கு ரூ. 1,757.00. திருநெல்வேலி மாவட்டம் சலவைத் தொழி லாளருக்கு ரூ. 15,693.78, முடிதிருத்துவோருக்கு ரூ. 7,664.15. தென் ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 19,358.33, முடிதிருத்துவோருக்கு ரூ. 17,821.03. திருச்சி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 5,510.50, முடிதிருத்துவோருக்கு ரூ. 5,583.79. இராமநாதபுரம் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 25,038.83, முடிதிருத்துவோருக்கு ரூ. 23,680.50. கோயம்புத்தூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 20,120.20, முடிதிருத்து வோருக்கு ரூ. 15,992.60. சேலம் மாவட்டம் சலவைத் தொழிலா ளருக்கு ரூ. 2,535.80, முடிதிருத்துவோருக்கு ரூ. 3,702.13. தஞ்சா வூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 13,761.45, முடி திருத்துவோருக்கு ரூ. 9,681.00. மதுரை மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 10,549.42, முடிதிருத்துவோருக்கு ரூ. 8,062.96. கன்னியாகுமரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 2,400.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 24.87. உதகமண்டலம் சலவைத் தொழி லாளருக்கு ரூ. 7,700.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,576.00. தரும புரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ.1,389.90, முடி திருத்துவோருக்கு ரூ. 2,599.80. ஆக ரூ. 2,26,471.95 கடன் தொகை 1966-67-ம் ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

மதுரை பால் பண்ணையில் தயார் செய்யப்பட்ட வெண்ணெய்

* 478 வினா—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை பால் பண்ணையில் 1968-ம் ஆண்டில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெண்ணெய் கெட்டுப்போய்விட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெய் விற்பனை குறைந்த தால் நெய் இருப்பு தேக்க மடைந்தது. இதனால் நெய்யின் தரம் கெட்டது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, நெய் தரம் குறைந்ததோடு, பால் பண்ணையிலே இருக்கின்ற வெண்ணெயிலே பல மோசடிகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறதே, அதன்பேரில் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வெண்ணெயிலே தகராறு இல்லை, மதுரையிலுள்ள பால்பண்ணையிலேதான் தகராறு. இது சம்பந்தமாக பல அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. அது சம்பந்தமாக சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் லட்சத்தில் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று சொல்ல முடியவில்லை. '*List of irregularities and losses*' என்ற வகையில் முழுவிவரம் இல்லை. வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் மொத்தமாகச் சொல்கிறேன். 25,13,000 ரூபாய் என்று அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காகத் தொழிற் பயிற்சிப் பள்ளி

* 479 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காக தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள பாய்லர் தொழிற்சாலை, சிறுதொழிற்சாலைகள், சின்கோமீடர் போன்றவற்றில் பெண்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க சௌகரியமாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆண்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தேடித் தந்துவிட்டு, அதற்குப் பின்னாலே இதுபற்றி யோசிக்கலாம்.